**மூன்றாம் அலகுத் தேர்வு 2015**
**தமிழ் முதல் தாள்**
**ஒரு மதிப்பெண் வினா - விடை**
**இயல் 7,8**

**தேர்வு எண் 1** **செய்யுட்பகுதி**

| |
|---|
| |
| 21 |

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. திறனறிந்து தேர்ந்துகொள்ள வேண்டியவர்
   1.அன்புள்ள பெற்றோர் 2. ஆர்வமுள்ள நண்பர் 3. மூத்த அறிவுடையார்
2. அரியவற்றுள் எல்லாம் அரிது........................பேணித் தமராக் கொளல்
   1. சிறியவர் 2. பெரியவர் 3. உறவினர்
3. முதலிலார்க்கு........................இல்லை.
   1. ஊதியம் 2. நட்பு 3. பகை
4. திருநாவுக்கரசர் காலம்....................ஆம் நூற்றாண்டு.
   1.கி.பி.12 2. கி.பி.7 3. கி.பி. 9
5. நாமார்க்கும் குடியல்லோம் என்னும் பாடல்.........................அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.
   1. பாரதிதாசனை 2. சுரதாவை 3. பாரதியாரை
6. சீறாப்புராணம்................காண்டங்களை உடையது.
   1. மூன்று 2. ஐந்து 3. ஏழு
7. கேழல் என்பதன் பொருள்............
   1. எருமை 2. புலி 3. பன்றி

கோடிட்ட இடங்களை நிரப்புக

8. இல்லாரை................எள்ளுவர்.
9. அறனீனும் இன்பமும் ஈனும்.............................தீதின்றி வந்த பொருள்.
10. திருநாவுக்கரசர் தமக்கையார்........................ஆவார்.
11. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள்................என வழங்கப்படுகிறது.
12. சீறாப்புராணத்தை இயற்றியவர்..........................
13. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்.................

யார், யாரிடம் கூறிய தொடர் இது?

14. வென்றி வாளரசே
15. வெறொரு காட்டினிற் புகுக

சீர்மோனையை எழுதுக.

16. மன்ற லுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

அடி எதுகையை எழுதுக

17. நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
    கூண்ட கால்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்ப

பொருத்துக

18. கான் - கரடி
19. உழுவை - சிங்கம்
20. மடங்கல் - புலி
21. எண்கு - காடு

## மூன்றாம் அலகுத் தேர்வு 2015
## தமிழ் முதல் தாள்
## ஒரு மதிப்பெண் வினா - விடை
## இயல் 7,8

| |
|---|
| 20 |

**தேர்வு எண் 2** **உரைநடைப்பகுதி**

### தமிழ் மொழியில் அறிவியல் சிந்தனைகள்

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உலகம் என்னும் தமிழ்ச்சொல்..............................என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
   1. உலகு 2. உலவு 3. உளது
2. தமிழர்கள் நிலத்தை...........வகையாகப் பிரித்துக்காட்டியிருக்கிறார்கள்.
   1. மூன்று 2. ஆறு 3. ஐந்து

சந்திப்பிழை நீக்கி எழுதுக.

3. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.

அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்குக.

4. நன்றாகப்..........(பசி)பின்னர் அளவுடன் உண்ணுதல் வேண்டும்.
5. தமிழர் நிலத்தை ஐவகையாகப்............(பிரி0 வாழ்ந்திருக்கிறார்கள்.

### காந்தியம்

கோடிட்ட இடங்களை நிரப்புக

6. காந்தியடிகள்.................................என்னும் நாடக நூலைப் படித்தார்..
7. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர்.........................

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதக

8. காந்தியடிகள்.............நாடகத்தைப் பார்த்து உண்மையே பேசவேண்டும் என்று உறுதி பூண்டார்.
   1. சிரவணபிதுர்த்தி 2. அரிச்சந்திரன் 3. பக்தப்பிரகலாதன்
9. பகைவனிடம் அன்பு காட்டு எனக் கூறிய நூல்.......................
   1. பகவத் கீதை 2. நன்னூல் 3. பைபிள்
10. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை..........
    1. ஆடம்பரம்,வீண்செலவு 2. எளிமை, சிக்கனம் 3. அன்பு, அருள்

வினாத்தொடர் அமைக்க

11. காந்தியடிகள், பல கோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
12. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல்வேண்டும்.

தொடர்களின் வகையைக் குறிப்பிடுக.

13. காந்தியடிகள் அரிச்சந்திர நாடகத்தை ஒருமுறை பார்த்தார்.
14. இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா?

ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக

15. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
16. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

பொருத்துக

17. சத்திய சோதனை - திருவள்ளுவர்
18. பகவத் கீதை - கிறித்தவ சமய நூல்
19. திருக்குறள் - காந்தியடிகள்
20. பைபிள் - இந்து சமய நூல்

**<u>மூன்றாம் அலகுத் தேர்வு 2015</u>**

**<u>தமிழ் முதல் தாள்</u>**

**<u>2 மதிப்பெண் வினா - விடை</u>**

**<u>இயல் 7,8</u>**

| |
|---|
| |
| 18 |

**தேர்வு எண் 4** **செய்யுட்பகுதி**

1. வன்மையுள் எல்லாந் தலையாயது எது?
2. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது?
3. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?
4. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மையது?
5. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?
6. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?
7. வேந்தற்குரிய பொருள்கள் எவை?
8. தேவாரம் - பொருள் எழுதுக.
9. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்?

**<u>மூன்றாம் அலகுத் தேர்வு 2015</u>**

**<u>தமிழ் முதல் தாள்</u>**

**<u>2 மதிப்பெண் வினா - விடை</u>**

**<u>இயல் 7,8</u>**

**தேர்வு எண் 5** **உரைநடைப்பகுதி**

| |
|---|
| 14 |

1. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.
2. கண்ணிடத்து அப்பியவர் யார்? இதில் கூறப்படும் செய்தி யாது?
3. காந்தியடிகளக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?
4. காந்தியடிகள் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?
5. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?
6. எவற்றை அறநெறியாகப் போற்றவேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?
7. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?

**மூன்றாம் அலகுத் தேர்வு 2015**

**தமிழ் முதல் தாள்**

**4 மதிப்பெண் வினா - விடை**

**இயல் 7,8**

| |
|---|
| |
| 12 |

**தேர்வு எண் 7** **செய்யுள்பகுதி**

1. சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.
2. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?
3. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

**மூன்றாம் அலகுத் தேர்வு 2015**

**தமிழ் முதல் தாள்**

**4 மதிப்பெண் வினா - விடை**

**இயல் 7,8**

**தேர்வு எண் 8** **உரைநடைப்பகுதி**

| |
|---|
| |
| 12 |

1. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.
2. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?
3. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

**மூன்றாம் அலகுத் தேர்வு 2015**
**தமிழ் இரண்டாம் தாள்**
**ஒரு மதிப்பெண் வினா - விடை**
**இயல் 7,8**

| |
|---|
| 23 |

**தேர்வு எண் 3** **இலக்கணப்பகுதி**

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ஒரு அகம், புறம் ஆகிய இரண்டும்.................இலக்கணம் ஆகும்.
2. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும்...........எனப்படும்
3. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி..........பகுதியாகும்.
4. யாமம் என்பது இரவு 10 மணிமுதல்.......வரை ஆகும்.
5. மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும்..........................பெரும்பொழுதுகளும் வரும்.
6. திருமால்..............நிலத்திற்குரிய தெய்வம்.
7. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும்..........திணைக்குரிய பறைகள்.
8. நெய்தல் திணைக்குரிய தொழில்................ஆகும்.

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. பொருளிலக்கணம்..............வகைப்படும்.
   1. இரண்டு 2. மூன்று 3. ஐந்து
10. அகத்திணைகள்............வகைப்படும்.
   1. மூன்று 2. ஐந்து 3. ஏழு
11. மார்கழி, தை ஆகிய இரண்டும்.............காலத்திற்குரியன.
   1. முன்பனி 2.பின்பனி 3. இளவேனில்
12. மருதநிலத்திற்குரிய தெய்வம்................
   1. முருகன் 2. திருமால் 3.இந்திரன்
13. பாலை நிலத்திற்குரிய பறவைகள்..........
   1. கிளி, மயில் 2.நாரை, அன்னம் 3. புறா, பருந்து.
14. புறத்திணைகள்....................வகைப்படும்.
   1. ஐந்து 2. ஏழு 3.பன்னிரண்டு
15. நிரைகவர்தல் என்பது................
   1. கரந்தை 2. வெட்சி 3. உழிஞை
16. மண்ணாசைக் கருதிப் போருக்குச் செல்வது...........
   1. வஞ்சித்திணை 2. காஞ்சித்திணை 3. வாகைத்திணை
17. பாடாண்திணை என்பது..............கூறுவது
   1. ஆண்மகனின் ஒழுகலாறுகள் 2. பெண்மகளின் ஒழுகலாறுகள். 3. போரின் தன்மைகள்
18. ஒரு தலைக்காமம் என்பது..............
   1. அன்பின் ஐந்திணை 2. கைக்கிளை 3. பெருந்திணை
19. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது..........ஆகும்.
   1.நொச்சி 2. தும்பை 3. காஞ்சி

பொருத்துக

20. குறிஞ்சி - முயல், மான்
21. முல்லை - புலி, கரடி
22. மருதம் - முதலை, சுறா
23. நெய்தல் - எருமை, நீர்நாய்

**மூன்றாம் அலகுத் தேர்வு 2015**

**தமிழ் முதல் தாள்**

**2 மதிப்பெண் வினா - விடை**

**இயல் 7,8**

**தேர்வு எண் 6** **இலக்கணப் பகுதி**

| |
|---|
| |
| 26 |

1. பொருளாவது யாது?
2. முதற்பொருள் என்பது யாது?
3. கருப்பொருள் என்பது யாது?
4. வயலும் வயல்சார்ந்த இடமும் எத்திணைக்குரியது?
5. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்திற்குரியன?
6. வைகறைக்குரிய கால அளவு யாது?
7. முருகன் எந்நிலத்திற்குரிய தெய்வம்?
8. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.
9. புறத்திணை என்பது யாது?
10. புறத்திணைகள் நான்கனைக் கூறுக.
11. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?
12. வாகைத்திணை என்பது யாது?
13. பொருந்தாக் காமம் பற்றிய திணை யாது?